**வாடகை கட்டுப்பாட்டு அதிகாரி மற்றும்**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**
ஆர்.சி.ஓ.பி.எண். 6/2014

இன்று 2025 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 14 ம் நாள் இன்று இந்த எ.ம.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.T.பிரவின்குமார், B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முருகேசன் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : மருதையன் | கிராமம் | : |
| வயது | : | தாலூக்கா | : |
| நாள் | : 14-02-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

1) மனுச் சொத்து விவரத்தில் தவறு எதுவும் இருக்கிறதா என்றால் இல்லை. நான் வாடகைக்கு உள்ள சொத்துக்கு மேல்புறத்தில் சுப்பிரமணியத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் இருக்கிறது என்றால் சரிதான். மனுச் சொத்துக்கு வடபுறத்திலும், தாராபுரம் ரோட்டுக்கு வடபுறத்திலும் பழைய ஆஸ்பத்திரி இருந்தது என்றால் சரிதான்.

2) மனுச் சொத்துக்கு மேல்புறம் பெட்ரோல் பங்க் உள்ளது என்றால் 2 வீதிகள் தள்ளி இருக்கிறது. பெட்ரோல் பங்குக்கும் மனுச் சொத்துக்கும் இடையில் மாநகராட்சியின் குடிநீர் தொட்டி இருக்கிறது என்றால் சரிதான். மனுச் சொத்துக்கு அருகில் ரவுண்டானா இருக்கிறது என்றால் சரிதான். சுமார் 1000 அடி தொலைவில் இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3) முதல் விசாரணை வாக்குமூலத்தில் 2 முதல் 6 எதிர்மனுதாரர்களுக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. வழக்கறிஞர் அறிவிப்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. வாடகை கேட்பதற்கு மனுதாரர்களுக்கு உரிமை இல்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை.

4) ராஜா சின்னப்பன், தம்பி ஆறுமுகம் இறந்த பிறகு அவரது வாரிசுகள் வழக்கு தாக்கல் செய்து, சொத்துக்களை பிரித்துக் கொண்டார்கள் என்றால் எனக்கு கடந்த 2014 ம் வருடம் வழக்கறிஞர் அறிவிப்பு வந்த பிறகு தான் தெரியும். நான் மனுதாரர்களின் உரிமையை மறுப்பதற்காக பொய்யாக வழக்காடுகிறேன் என்றால் சரியல்ல. ராஜா சின்னப்பனுக்கு யார் வாரிசு என்று எனக்கு தெரியாது.

5) தம்பி ஆறுமுகத்தின் வாரிசு யார் என்று எனக்கு நேரடியாக தெரியாது. ஆர்.சி.ஓ.பி.எண்.12/2014 ல் இறந்த நபர்களின் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்க மனு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. மனுச் சொத்தின் விஸ்தீரணம் எத்தனை அடி என்று எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து மனுச் சொத்துக்களை அளவீடு செய்து வாடகை நிர்ணயம் செய்து அறிக்கை தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும். தவறான விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

6) நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் எந்த விவரம் தவறானது என்றால் குறிப்பிட்டு எனக்கு சொல்லத் தெரியவில்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை தாக்கல் செய்திருக்கிறேன். குறிப்பிட்டு சொல்லத் தெரியவில்லை. எவ்வளவு வாடகை நிர்ணயம் செய்து அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு பின்பாவது பக்கத்தில் உள்ள கட்டிடங்களுக்கு எவ்வளவு வாடகை என்று தெரிந்து கொள்ள நான் முற்பட்டேனா என்றால் இல்லை.

7) மனுக் கட்டிடத்திற்கு அருகில் நண்பன் மொபைல் கடை இருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அருகில் உள்ள கடைகளுக்கு ஒரு சதுரடிக்கு ரூ.70/- வீதம், 500 சதுரடிக்கு ரூ.35,000/- வரை வாடகை கொடுத்து வருகிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாராபுரம் ரோட்டில் எம்.ஆர்.டெலிகாம் இருக்கிறது என்றால் எனக்கு தெரியாது. அதற்கு 700 சதுரடிக்கு ரூ. 40,000/- வரை வாடகை கொடுத்து வருகிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

8) நான் வாடகைக்கு இருக்கும் கட்டிடத்திற்கு அருகில் சுப்ரீம் மொபைல்ஸ் இருக்கிறது. அதற்கு சதுரடிக்கு ரூ.80/- வீதம் 1250 சதுரடிக்கு மாதம் ரூ. 1,00,000/- வரை வாடகை தருகிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது கடைக்கு 1000 அடி தள்ளி சுப்ரீம் மொபைல்ஸ் இருக்கிறது. நீதிமன்ற ஆணையர் வந்து பார்த்தபோது, புதர் மண்டிக் கிடந்ததால், அதை சுத்தம் செய்தால் தான் அளக்க முடியும் என்று சொல்லி விட்டார் என்றால் இல்லை.

9) மனுச் சொத்தில் கிணறு, வாட்டர் டேங்க் இருக்கிறது. கழிப்பறை வசதி இருக்கிறது. மனுச் சொத்து முழுவதையும் நான் பயன்படுத்தி வருகிறேன் என்றால் சரிதான். பின்புறம் மனுதாரர்களின் இடம் இருக்கிறது. மூன்று மின் இணைப்புகள் இருக்கிறது என்றால் இரண்டு இணைப்புகள் இருக்கிறது. அது தவிர வணிக மின் இணைப்பு இருக்கிறது என்றால் இல்லை. ஒரு மின் இணைப்பு என்னிடமும், ஒரு மின் இணைப்பு மனுதாரரிடமும் இருக்கிறது.

10) நான் தொழில் வரி செலுத்தி வருகிறேன் என்றால் ஆரம்பத்தில் இருந்து செலுத்தி வருகிறேன். எனக்கு வருமான வரி கணக்கு தனியாகவும், தொழிலுக்கு தனியாக வருமான வரி கணக்கும் இருக்கிறது. வருமான வரி கணக்கில் தொழில் வரியை காட்டி இருக்கிறேனா என்றால் ஆடிட்டரிடம் கேட்க வேண்டும். ரூ.12,00,000/– எப்போது எங்கு வைத்து கொடுக்கப்பட்டது என்றால் தேதி மறந்துவிட்டது. வழக்கறிஞர் ஆனந்த் வீட்டில் வைத்து கொடுக்கப்பட்டது.

11) ராஜா சின்னப்பன், தம்பி ஆறுமுகம், சுப்பிரமணியம் பெயரில் பற்று வைத்திருக்கிறேனா என்றால் இல்லை.  ரொக்கமாகத் தான் கொடுத்தேன். அந்த பணத்தை எனது வருமான வரிக் கணக்கில் காட்டியிருக்கிறேனா என்றால் இல்லை. மனுச் சொத்தில் மாற்றம் எதுவும் நடைபெற்றுள்ளதா என்றால் நான் நிறைய மாற்றங்கள் செய்திருக்கிறேன். என்ன மாற்றம் செய்திருக்கிறேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. மனுக் கட்டிடத்திற்கு நான் வாடகைக்கு வந்தது முதல் எவ்வளவு செலவு செய்திருக்கிறேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை.

12) அவ்வாறான செலவான தொகையை எனது தனிப்பட்ட அல்லது தொழில் வருமான வரி கணக்கில் குறிப்பிட்டு காட்டவில்லை என்றால் சரிதான். மனுச் சொத்தில் ரூ.30,000/- முன்பணம் கொடுத்ததாக சொல்லி இருக்கிறேன். முன் பணத் தொகையை வருமான வரி கணக்கில் காட்டி இருக்கிறேனா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் ரூ.1,78,000/-ஐ வாடகையாக நிர்ணயம் செய்திருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

13) அப்பு சுப்பிரமணியம் அடிக்கடி என்னை சந்திப்பார் என்றால் சரிதான். வழக்கறிஞர் அலுவலகத்திற்கு வருவார் என்றால் அது எனக்கு தெரியாது. கடைசியாக நான் அப்பு சுப்பிரமணியத்தை எப்போது பார்த்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. கடைசி வாடகையை அப்பு சுப்பிரமணியத்திடம் கொடுத்தேனா என்றால் என் அலுவலகத்தில் கொடுத்திருக்கிறார்கள். தேதி ஞாபகமில்லை. என் அலுவலகத்தில் அது குறித்த விவரங்கள் எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

14) கடந்த 2012ம் வருடம் பிப்ரவரி மாதம் முதல் வாடகை செலுத்தவில்லை என்றாலும், அதனால் தான் வவுச்சர் கொடுக்கவில்லை என்று குறிப்பிட்டு இருக்கிறேன் என்றார் சரியல்ல. கடந்த 2014ம் வருடம் 7ம் மாதத்தில் இருந்து நீதிமன்றத்தில் வாடகையை வைப்பீடு செய்து வருகிறேன். நீதிமன்றத்தில் வைப்பீடு செய்த தொகையை எனது வருமான வரி கணக்கில் காட்டியிருக்கிறேனா என்றால் வருமான கணக்கை பார்க்க வேண்டும்.

15) வழக்கறிஞர் அறிவிப்பில் தீர்ப்புப்படி மனுச் சொத்து மனுதாரர்களுக்கு பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும் என்று பதில் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டு உள்ளது என்றால் எனக்கு ஞாபகமில்லை. அப்பு சுப்பிரமணியம் என்ன மோசடி செய்தார் என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. சென்னை வழக்கிற்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரிதான்.

16) அப்பு என்கிற சுப்பிரமணியம் மோசடி செய்ததாக கடந்த 12.06.2014 ம் தேதிய வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். என்ன மோசடி என்று எனக்கு ஞாபகமில்லை. நான் கடந்த 2012 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் வாடகை செலுத்தவில்லை என்றாலும், முறையாக வாடகை செலுத்தியதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வாடகையை கொடுத்த விவரத்தை நான் தான் மெய்ப்பிக்க வேண்டும் என்றால் சரியல்ல. சரியாக வாடகை செலுத்தாமல் சொத்தை அனுபவிக்கும் எண்ணத்தில் நான் நேர்மையான வாடகையை செலுத்த மறுக்கிறேன் என்றால் சரியல்ல. எனவே மனு அனுமதிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல. முறையாக வாடகை செலுத்தாததால் நான் கட்டிடத்தை காலி செய்து, ஒப்படைக்கவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

PRAVEEN KUMAR T

Digitally signed by PRAVEEN KUMAR T
Date: 2025.02.14 15:24:41 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.